முருகப்பெருமான் துணை

**மகான் இடங்கழி நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

20.11.2021, சனிக்கிழமை

1. அவனி காத்திடும் அரங்கனே
ஆறுமுகனார் சக்தியாக வந்த
அவதாரமே ஞான தேசிகனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா பிலவ தேளின் திங்கள்
காரிவாரம் சதுர் திகதியதும்
(பிலவ வருடம் கார்த்திகை மாதம் 04ம் நாள், 20.11.2021 சனிக்கிழமை)
கண்டுரைப்பேன் இடங்கழி நாயனார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை வழி காட்டும் அரங்கன்
ஞானம்தனை வேதமாக மக்கள்
நம்பிக்கை வைத்து வருமுலகில் ஏற்று வர
4. வருகவே மக்களை தேற்றும்
வரமாக அரங்க ஞானி ஆசி
பெருமளவில் கூடி இனிதே
பேருலகம் ஞானவான்கள் நிறைந்த
5. நிறைந்த காலமாக மாறும்
நிலமதனில் தரும ஞான பலத்தை
குறைவிலா அன்னதானம் கொண்டு
குருவரங்கன் தொண்டர் படை அமைத்து
6. அமைத்து உயர் சேவை ஆற்றிவர
அகிலம் எங்கிலும் இந்த சேவை
அமைப்பாக அரங்கன் சன்மார்க்கமாக
அகிலமெங்கும் ஆற்றல்பட இயங்கிவர
7. வருகவே உலக மக்களெல்லாம்
வணங்கித் தொண்டர்களாகி
குருவேயென அரங்க ஞானியரிடம்
குறையிலா தீட்சை ஏற்றுத் தொடர
8. தொடரவே இலகுவாக ஞானசித்தி
தேசிகன் ஆசிபட உலகோர் கிட்டி
இடரை வெல்லுகின்ற பலமும்
இனிதே அழியாமைக்கான வரமும்
9. வரமும் கிட்டி ஞானவான்களாக
வையகம் காக்கும்படி சக்திகள்
திறமாக திடமாகப் பெற்று நன்கு
தேசிகன் தேடும் ஞானிகளாக உலகோர்

10. உலகோர் சிறந்து நன்கு
உயர்வர் உலகமாற்றம் செய்யும்
தலைவன் முருகப் பெருமான் ஆசிபட
தரணியில் ஞான ஆட்சி அமைய

11. அமைய உண்டான காலம்தனை
அரங்கன் தருமம் வளர்த்துமே
அமைத்திடுவர் இடர்களை வென்று
அறிவித்த துல்லிய ஆசி முற்றே

–சுபம்–